அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் முழுப் பொறுப்பையும் மாநில அரசே ஏற்கும் திட்டம்

*வினா எண். 719.—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சர்க்கரை, உணவு எண்ணை போன்ற பொருட்களை விநியோகிக்கும் முழுப் பொறுப்பையும் மாநில அரசுகளை ஏற்கும்படி மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் தமிழ்நாடு அரசு அதை ஏற்றுக் கொள்ளுமா?

(இ) எப்பொழுதிலிருந்து இது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) லெவி சர்க்கரை, லெவி கோதுமை, பாமோலின் ஆகியவை மத்திய அரசால் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்க தமிழ் நாட்டிற்கு மாதாமாதம் ஒதுக்கீடு செய்வதால், இப்பொருட் களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஏற்கனவே இந்தப் பொருட்களைப் பொறுத்த மட்டில் இந்தப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. கு. ரமணி : இந்த சர்க்கரை, உணவு எண்ணெய், கோதுமை போன்ற இந்தப் பொருள்களை மொத்தமாக தமிழ்நாட்டுக்கு இவ்வளவு கொடுப்பது என்று மத்திய அரசு பொதுச் சேமிப்பிலிருந்து அவர்கள் பிரித்து விடுகிறார்கள், ஆனால் நம் தமிழ்நாட்டில் சர்க்கரை அதிகமான அளவிற்கு உற்பத்தியாகிறது. இங்கிருந்துதான் சர்க்கரை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே அந்தச் சர்க்கரையை எடுத்துக் கொள்வதில் பரிபூர்ண பொறுப்பை தமிழக அரசே ஏற்றுக் கொண்டு நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது? கோதுமையை வேறு இடத்தில் இருந்து பெற்று நமக்குத் தர வேண்டியிருக் கிறது. ஆனால் சர்க்கரை இங்கேயே உற்பத்தியாகிறது. ஆகவே நம் அரசே முழுப் பொறுப்பையும் ஏற்று அதை விநியோகிப்பதில் என்ன தவறு இருக்கிறது? அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சர்க்கரையைப் பொறுத்தவரையில் இந்தியா முழுவதும் கட்டுப்பாடு விதிக்கிற பொறுப்பினை மத்திய அரசுதான் வைத்திருக்கிறது. 65% லெவி சர்க்கரைக்கு ஏற்றுக்கொள்கிறார்கள். மீதியை அவர்கள் விருப்பப்படி விற்றுக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அந்தந்த ஆலைகளுக்கு விட்டுவிடுகிறார்கள். ஆகவே நாமே இங்கே உற்பத்தி செய்வதால் நாமே எடுத்துக் கொள்வதற்கில்லை. மொத்தமாக ஜெனரல் பூல் ஆக்கி எந்தெந்த இடங்களிலிருந்து

1982 ஏப்ரல் 2]

எந்தெந்த இடங்களுக்குப் போகவேண்டுமென்று ஒதுக்கீடு செய்து தருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டுக்கு 19,000 டன் லெவி சர்க்கரையாக தருகிறார்கள். நாம் அடிக்கடி அது போதாது என்று வலியுறுத்தி வருகிறோம். கூடுதல் தந்தால் குடும்ப அட்டைக்கு கொஞ்சம் கூடுதலாகத் தரலாம் என்று எண்ணுகிறோம். இப்போது ஒரு நபருக்கு 425 கிராம் என்று கிலோ ரூ. 3.65 என்றளவில் தந்து வருகிறோம்.

திரு. கு. ரமணி : இப்போது வினியோகிக்கப்படும் சர்க்கரை மிளகாய்த்தூள் போல் சிறிதாக வினியோகிக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி பல புகார்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு. அந்த சர்க்கரை மிகவும்பொடியாக இருக்கிறது. சர்க்கரை நல்ல கிரிஸ்டல் சர்க்கரையாக இருந்தால் இதில் பாதி போட்டால் கூட போதும். எனவே பொடி சர்க்கரையாகக் கொடுப்பதால் பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. அப்படிப்பட்ட பொடி சர்க்கரை தமிழ்நாட்டில் உற்பத்தியாவதில்லை. ஆகவே தமிழ்நாட்டில் உற்பத்தியாகக் கூடிய நல்ல பொருளை மக்களுக்கு நல்லமுறையில் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? ஜெனரல் பூல் என்று வைத்திருந்தாலும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் நல்ல சர்க்கரையை நம் தமிழ்நாட்டிலே மக்களுக்குக் கிடைக்கும்படி மத்திய அரசை வலியுறுத்தி வாங்கிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற புகார் என் கவனத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் இந்த சர்க்கரை இந்த மாநிலத்திற்கு தேவையில்லை. இந்த மாநிலம் விரும்புகிற சர்க்கரையை இந்த மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முறையீடு செய்யலாம். அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.10)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அந்தியாவசியமான பொருள்களான பருப்பு, மிளகாய் வத்தல், மல்லி, உளுந்து போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய காலத்திலே மலிவாகவும் அவர்கள் உற்பத்தி செய்து வியாபாரிகளிடம் விற்ற பிறகு, ஒன்று கு இரண்டு, அல்லது மூன்று பங்கு விலை உயர்ந்து விடுகிறது. ஆகவே, இந்த அத்தியாவசியப் பொருள்கள் அத்தனையையும் அரசாங்கமே மொத்த கொள்முதலை ஏற்று, சரியான முறையில் வருடம் பூராவும் அந்தப் பொருள்கள் மக்களுக்கு சரியான முறையிலே, மலிவான விலையிலே கிடைப்பதற்குரிய ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக கட்டுப்பாட்டுக்குள்ள, பற்றாக்குறையுள்ள முக்கியமான உணவுப் பண்டங்களை நுகர் பொருள் வாணிபக்

கழகம் மூலம் வாங்கி, நாம் நியாய விலைக் கடையின்மூலம் பகிர்ந்து கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற உணவிற்குத் தேவையான வேறு சில பண்டங்களில் கட்டுப்பாடு இல்லை. இருந்தாலும், அவர்கள் கூறுவது போன்று, இருக்கின்ற தன்மையை ஆராய்ந்து கூட்டுறவுத் துறையின் மூலம் வாங்கி, அதன்மூலமாக விநியோகிக்கின்ற முறையை ஓரளவு செய்து கொண்டிருக்கிறோம். மலிவான விலையில் விற்கின்றபோது, அவைகளை வாங்கி, விலை ஏறுகின்ற போது மக்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையில் கொடுக்கின்ற அடிப்படையில்தான் இப்போது கூட்டுறவுத் துறையிலே அவ்வாறு செய்யப்பட்டு வருகிறது. அதை இன்னும் கொஞ்சம் பரவலாக்க, அதிகமாக்க முயற்சி எடுத்துக்கொள்வது பற்றி அரசு ஆராயும்.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்கு 65% ஒதுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளிலே உற்பத்தியாகக்கூடிய அத்தனை சர்க்கரை ஆலைகளிலும் 65% சர்க்கரை நமக்கு கிடைக்கும்போது, நம் மாநிலத்திற்கு எடுத்துக்கொள்வது போக, மீதமுள்ளதை வெளிநாட்டிற்கு அனுப்ப நம் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 65% சர்க்கரை நமக்கு ஒதுக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு ஆலையிலும் உற்பத்தியாகிற சர்க்கரையில் 65% அரசு கொள்முதலாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 35% சர்க்கரையை அவர்கள் விருப்பப்படி விற்றுக் கொள்ளலாம். 65% சர்க்கரையை இப்படி எடுத்துக்கொண்டு, ஒரு ஜெனரல் பூலில் இந்தியா முழுவதிற்கும் கணக்கிட்டு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து ஆங்காங்கு கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்தாலும், வேறு மாநிலங்களிலே சர்க்கரை அறவே இல்லாத நிலைமை இருக்கிறது. அந்த வகையிலே அவர்களுக்கு கொடுக்கின்ற போது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கணக்கிட்டு, 19,800 டன் என்று ஒதுக்கித் தருகிறார்கள். அதற்கு மேல் கேட்டாலும், ஒதுக்குவதற்கு வாய்ப்பில்லை என்று பதில் தெரிவித்திருக்கிறார்கள்.

வேலூரிலுள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண் 720—திரு. சி. கோபால்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூரில் தற்போது உள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்திற்கு மாற்றுவதாக உத்தேசம் உள்ளது?